உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.06.2026 • மலர் 04 • இதழ்: 170 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 19.06.2026 • Vol : 04 • Issue : 170 • Page : 4 • Rs. 5/-

'பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையில்

# உலக அமைதிக்கான வழி உள்ளது

## ஜனாதிபதி திரவுபதி முர்மு

போபால், ஜூன் 19

உலகில் தற்போது நிலவும் பதற்றம், மோதல் மற்றும் போர் உள்ளிட்ட பாதிப்புகளில் இருந்து அமைதியின் பாதைக்கு திரும்புவதற்கான வழி பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையில் உள்ளது என ஜனாதிபதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, 5 நாட்கள் பயணமாக மத்திய பிரதேசம் சென்றுள்ளார். டெல்லியில் இருந்து இந்தூர் வந்தடைந்த திரவுபதி முர்முவை, மத்திய பிரதேச கவர்னர் மங்கு பாய் பட்டேல் மற்றும் முதல் மந்திரி மோகன் யாதவ் ஆகியோர் வரவேற்றனர்.



தொடர்ந்து பேதுல் மாவட்டத்திற்கு சென்ற ஜனாதிபதி திரவுபதி முர்மு, அங்கு 'பிரம்ம குமாரிகள்' என்ற ஆன்மீக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த, 'ஆன்மீக விழிப்புணர்வால் பழங்குடியின சமூகத்தை மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். அந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது;

"பழங்குடி மக்களின் வாழ்க்கையும், மரபுகளும் அமைதியையும், நல்லிணக்கத்தையும் பறைசாற்றுகின்றன. பழங்குடி சமூகங்கள் பூமி, சூரியன், நீர் மற்றும் மரங்களை வழிபடுகின்றனர். இயற்கையுடனும், அதன் மீதான பக்தியுடனும் பிணைக்கப்பட்ட பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையே, தற்போது பதற்றம், மோதல் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வழியாக உள்ளது.

பழங்குடி சமூகங்கள் சுயமரியாதையுடனும், பொறுமையுடனும் வாழ்கின்றனர். தங்கள் பிரச்சனைகளைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை. அவர்கள் எதையும் கேட்பதில்லை; இயற்கையோடு இணைந்து, காலப்போக்கில் எல்லாம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறார்கள். அவர்கள் அமைதியாக வாழவே விரும்புகிறார்கள்.

பழங்குடி சமூகங்களின் வாழ்க்கை முறை, ஆன்மிகத்தின் அடிப்படை அம்சங்களுடன் நெருக்கமாக உள்ளது. அவர்களின் வாழ்க்கை முறை ஆன்மீகத்தில் வேரூன்றியுள்ளது. நாம் பழங்குடி சமூகங்களை ஆதிவாசிகள் என்று அழைக்கிறோம். சிலர் அவர்களை வனவாசிகள் என்கிறார்கள்.

மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம் மற்றும் அன்புடன் வாழ பழங்குடி மக்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் வன்முறையிலிருந்து விலகி இருக்கிறார்கள். பண்டைய காலங்களில் அவர்கள் அப்படியே இருந்தனர், இன்றும் அப்படியே இருக்கிறார்கள். ஈரக் களிமண்ணைப் போல, அவர்களை எந்த வடிவத்திலும் வடிவமைக்க முடியும். அவர்கள் இயற்கையையும், பஞ்ச பூதங்களையும் வணங்குகிறார்கள்.

## 4 ஆண்டுகளுக்கு பிறகு முழுமையாக படிக்கப்பட்ட கவர்னர் உரை..!

சென்னை, ஜூன் 19

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் இன்று கவர்னர் உரையுடன் தொடங்கியது.

தமிழக பொறுப்பு கவர்னரான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், ஆங்கிலத்தில் பேசினார்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, கவர்னராக இருந்த ஆர்.என்.ரவி, 2022ம் ஆண்டு சட்டசபையின் முதல் கூட்டத்தில், தனது உரையை முழுமையாக படித்தார். அரசின் அறிவிப்புகள், திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

ஆனால், 2023ம் ஆண்டு சட்டசபை முதல் கூட்டத்தில் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி, தனது உரையில் இருந்த மகளிர் முன்னேற்றம், மதச்சார்பின்மை, சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கருணாநிதி ஆகிய சொற்களை கூறாமல் தவிர்த்தார்.

இதனால், அவையில் சலசலப்பு ஏற்பட்டது. அப்போது எழுந்து பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு கொடுத்த உரையில் இருப்பது தான் அவைக் குறிப்பில் ஏற்றப்படும் என்று கூற, அவையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார்.

தொடர்ந்து, 2024ம் ஆண்டு சட்டசபை முதல் கூட்டத்தில் பேச வந்த கவர்னர் ஆர்.என்.ரவி, தனது உரைக்கு முன்னால், தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்பட்டது, தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, உரையை வாசிக்காமல் புறக்கணித்து சென்றார். ஆனாலும், கவர்னர் உரையை தமிழில் வாசித்த சபாநாயகர் அப்பாவுவின் பேச்சு அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது.

கடந்த ஆண்டு (2025) சட்டசபையின் முதல் கூட்டத்தில் பேச வந்த கவர்னர் ஆர்.என்.ரவி, முந்தைய ஆண்டில் கூறிய அதே காரணத்தை மீண்டும் எழுப்பி, அவையில் உரையை வாசிக்காமல் வெளியேறினார்.

இந்த ஆண்டு (2026) தொடக்கத்தில் நடைபெற்ற முதல் சட்டசபை கூட்டத்திலும், தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, மீண்டும் உரையை வாசிக்காமல் கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார்.

இப்படி, 2023ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை 4 முறை அவர் கவர்னர் உரையை முழுமையாக வாசிக்கவில்லை. தற்போது, ஆர்.என்.ரவி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்திற்கு இன்னும் புதிய கவர்னர் நியமிக்கப்படவில்லை.

கேரள கவர்னராக இருக்கும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் , தமிழக பொறுப்பு கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டத்தில் பேசிய அவர், தனது உரையை முழுமையாக வாசித்தார்.




லால்குடி அருகே

## மின்சாரம் தாக்கி வாலிபர் சாவு

லால்குடி, ஜூன் 19

லால்குடி அருகே செம்பரை கிராமத்தைச் சேர்ந்த பர்வீன் கனி, கோமக்குடி கருப்பு கோவிலில் சீரியல் செட் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, தாழ்வான மின்கம்பி மீது கை உரசி மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார்.

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். இது குறித்து லால்குடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மணப்பாறை அருகே

## வீட்டிற்குள் புகுந்த ஏழடி நீளம் உள்ள பாம்பு



திருச்சி, ஜூன் 19

மணப்பாறை அருகேசீகம்பட்டியில் முனியப்பன் தனது தாயார் வீட்டுக்கு வெளியே கட்டிலில் படுத்திருந்தபோது, வீட்டிற்குள் ஊர்ந்து சென்ற ஏழடி நீளப் பாம்பை கண்டார். இது குறித்து அவர் தனது மகனிடம் கூற, மகன் மணப்பாறை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் அளித்தார். சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் அந்தப் பாம்பைப் பிடித்து, அருகில் உள்ள வனப்பகுதியில் பாதுகாப்பாக விட்டனர்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில்

## உலக தர வசதிகளை ஏற்படுத்த ரூ. 19 கோடியில் புனரமைப்பு பணிகள் தீவிரம்



தஞ்சாவூர் ஜூன் 19

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் ரூபாய் 19கோடி மதிப்பிட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்த கலெக்டர் பழமை மாறாமல் உலக தரத்தினால் ஆன வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்

தஞ்சாவூர் அரண்மனை வளாகத் தில் உள்ள சரசுவதி மகால் நூலக த்தில் புனரமைப்பு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் சரசுவதி மகால் நூலக கட்டிடம் அதன் பழமை மாறாமல் புனரமைப் புமைக்கப்பட்டு வருகிறது .இதில் பழுதடைந்த சுவர்கள், மேற்கூரை கள், வளைவுகள் மற்றும் தளங்க ளை சீரமைக்கும் பணி மேற் கொள் ளப்பட்டு வருகின்றன. மேலும் மழை நீர் உட்புகாத வகையில் மேற்கூரைப் பகுதியில் ஓடுகள் அமைத்தல், பாரம்பரிய முறையில் டைல்ஸ் பதிக்கும் பணிகளும், நடைபெற்று வருகிறது

இந்தப் பணிகளை தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் நூலகத்தின் பாதுகாக்கப்பட்டு வரும் அரிய பழங்கால ஓலைச்சுவடிகள், நூல்கள் மற்றும் அவை தலைப்புகளில் வகைப்படுத்தி பராமரிக்கப்பட்டு ள்ள விதம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்

மேலும் நாள்தோறும் நூலகத்திற் கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும், அடிப்படை வசதிகள் நூல் மற்றும் நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கலெக்டர் ஆய்வு செய்தார் அதனை தொடர்ந்து ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நூலக வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பொது மக்களின் வசதிக்காக நடை பாதை கள் மேற்படுத்தும் வகையில் புதிதாக கருங்கல் தளம் அமைக் கும் பணிகளையும் கலெக்டர் பார்வையிட்டார்

அப்போது பணிகளை விரைவாக வும், தரமாக வும் ,உரிய காலத்திற்கு ள் நிறைவு செய்ய வேண்டும் என்றும், தேவையற்ற பொருட்களை அகற் றி பழமை மாறாமல் புதிய பொலிவு டன் உலக தரத்திலான நூலக அனுபவத்தை பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று தொடர்புடைய அலுவலர் களுக்கு அறிவுறுத்தினார்

தொடர்ந்து நூலகத்தின் வாசகர் பிரிவு, அருங்காட்சியகம், விற்பனை பிரிவு, ஒளி, ஒலி காட்சிகள், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பாடுகள் குறித்தும், தர்பார் அரங்கத்தை பார்வையிட்டு, அதன் வரலாற்று சிறப்புகள் மற்றும் பாரம் பரிய பணிகள் குறித்தும் அதிகாரி களிடம் கேட்டிருந்தார்

பின்னர் அரசர் மேல்நிலைப் பள்ளியிலும், கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின் போது உதவி இயக்குனர் (தொல்லியல் துறை) தங்கதுரை, உதவிசெயற்பொறியாளர் ரஞ்சித் ,உதவி பொறியாளர் கள் கேசவன், மயில் ராஜ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்

தஞ்சாவூரில்

## நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் ஜூன் 19

தஞ்சாவூரில் இடதுசாரிகள் பொது மேடையின் சார்பில் தலைமை தபால் நிலையம் அருகே நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தாளாண்மை உழவர் இயக்க நிறுவனர் திருநாவுக்கரசு தலைமை தாங்கினார் .இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார் .மக்கள் அதிகாரத்தின் மூத்த தலைவர் காளியப்பன் ஆர்ப்பாட்டத்தைதொடங்கிவைத்து பேசினார் .ஆர்ப்பாட்டத்தில் நீட் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். நீட் மட்டும் சிபிஎஸ்இ உள்ளிட்ட உயர்கல்வி தேர்வுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளுக்கு பொறுப்பேற்று மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் . பொது பட்டியலில் உள்ள கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்

ஆர்ப்பாட்டத்தை உலக தமிழர் பேரவையின் துணைத் தலைவர் அய்யனாபுரம் முருகேசன் முடித்து வைத்து பேசினார் இதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சேவையா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக்கட்சி மாநகர செயலாளர் வடிவேலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

சத்துவாச்சாரியில்

## குபேர அங்காளம்மன் ஆலய கும்பாபிஷேகம்



வேலூர், ஜூன் 19

வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி பகுதி 2 நேரு நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகுபேர அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் அஷ்டபந்தன ஜீர்ணோத்தாரன மகா கும்பாபிஷேகம் விழாவெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக மங்களஇசை, இரண்டாம் கால யாக சாலை பூஜை, ஹோமம், மஹாசங்கல்பம், விசேஷ திரவ்ய ஹோமம், மஹா பூர்ணாஹூதி, யாத்ரதானம், கலசங்கல் புறப்பாடு, கோபுர கலச மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபா ஆராதனை நடைபெற்றது, இதில் சுற்று வட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேக விழாவிற்கு பள்ளிகொண்டா யாகரிஷி ஸ்ரீ வராக குருஜி சுவாமிகள் தலைமை வகித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை ஏ.சுப்பிரமணி, என்.சீனிவாசன் ஆச்சாரி, கே.ரவி, என்.குமரேசன் மற்றும் ஆலய அறக்கட்டளை நிர்வாகிகள், விழா குழுவினர்கள், ஊர்பொது மக்கள் நேரு நகர் இளைஞர்கள் ஆகியோர்செய்து இருந்தனர்.

# தமிழக முதலமைச்சர் விஜய் பிறந்த நாள் விழா : தவெக அரசின் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரை வரவேற்று இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



தேனி, ஜூன் 19

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக வெற்றி கழகத்தில் தலைவர் திரு ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டும்,18.6.26 ல் நடைபெறவுள்ள தவெக அரசின் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரை வரவேற்கும் விதமாகவும், பெரியகுளம்14,15 ஆகிய வார்டு பகுதியில் சாலை பணிகளில் ஈடுபட்டிருந்த சாலைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தமிழக வெற்றிக் கழக உறுப்பினர் முருகேஸ்வரி கார்த்திக், நகர செயற்குழு செயலாளர் பிரபு மற்றும் தவெக நிர்வாகிகள் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். மேலும் தவெக அரசு மக்கள் சக்தியுடன், தமிழகத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் மக்கள் நல ஆட்சியாக, நல்ஆட்சி புரியும் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவில் வருஷாபிஷேகம்: ஜூன்.22ல் நடக்கிறது



திருவட்டாறு, ஜூன். 19

திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவிலில் 418 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 2022 ஆண்டு ஆனி மாதம் உத்தரம் நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடந்ததால் , அதை கணக்கில் கொண்டு, ஆனிமாத உத்தரம் நட்சத்திர நாளான ஜூன் 22 ம்தேதி வருஷாபிஷேகம் நடைபெறுகிறது.

108 வைணவத்திருப்பதிகளில் ஒன்றானதும், நம்மாழ்வாரால் பாடல் இயற்றப் பெற்ற திருத்தலமான திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் கும்பாபிஷேகத்துக்குப்பின்னர் கோவிலில் சாமிதரிசனம் செய்ய வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருகிறது.வருஷாபிஷேகத்தையொட்டி ஜூன்21.ம் தேதி மாலை சுத்தி கலச பூஜை நடக்கிறது. . ஜூன்.22. ம் தேதி காலை 5 மணிக்கு கோவில் நடை திறப்பைத்தொடர்ந்து நிர்மால்ய தரிசனம் நடக்கிறது. தொடர்ந்து சுவாமி கருவறையில் இருந்து ஒற்றைக்கல் மண்டபத்தில் எழுந்தருளல், நவகலச அபிஷேகம், கணபதி ஹோமம், சிறப்பு ஸ்ரீபலி எழுந்தருளல் ஆகியன நடக்கிறது. தொடர்ந்து உதயமார்த்தாண்ட மண்டபத்தில் 25 கலசங்களுடன் சிறப்பு பூஜை நடக்கிறது. பின்னர் ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பூதேவி, ஸ்ரீதேவிக்கு 25 கலசங்களில் பூஜை செய்யப்பட்ட புனித நீரால் சிறப்பு அபிஷேகம், கிருஷ்ண சுவாமி, ஐயப்ப சுவாமி, குலசேகரப்பெருமாள் ஆகியோருக்கு நவ கலசஅபிஷேகம், தீபாராதனை ஆகியன நடக்கிறது. மதியம் சிறப்பு அன்னதானம் நடைபெறுகிறது.

# குமரியில் கூடுதல் நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்க மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை



நாகர்கோவில், ஜூன்.19

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு நெல்கொள்முதலுக்கு 11 கொள்முதல் நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் உரிய கட்டுமான வசதிகள் இல்லாததால் கடந்த கோடைகாலத்தில் கும்பபூ சாகுபடி நெல் முழுமையாக கொள்முதல் செய்யப்படாததுடன்மழையில்நனைந்துசேதமடைந்து.

இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் கன்னிப்பூ சாகுபடி நெல் மணிகளை

செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் விவசாயிகள் அறுவடை செய்யும் போது, மழைக்காலம் துவங்கும் என்பதால் இப்போதே, நெல்லை கொள்முதல் செய்து சேமிப்பதற்கு கூடுதல் வசதிகள் ஏற்பாடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புதிதாக இடங்களை தேர்வு செய்து, புதிய கட்டிடங்கள் கட்டி நிரந்தரமாக தீர்வு ஏற்படுத்துவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால், தற்காலிக ஏற்பாடாக பிற துறைகளில் பயன்படுத்தப்படாமல் காலியாக கிடக்கும் குடோன்களையும், ஷெட் மற்றும் வளாகங்களையும் பயன்படுத்தலாம் என ஏற்கனவே அதிகாரிகள் மற்றும் பாசனத்துறை நிர்வாகிகள் பேச்சுவார்த்தையின் போது உடன்பாடு ஏற்பட்டது.

தொடர்ந்து இது சம்பந்தமாக பாசனத்துறை நிர்வாகிகள் சேர்மன்.வின்ஸ் ஆன்றோ தலைமையில் மாவட்டக் குழு உறுப்பினர்கள் தாணுபிள்ளை, முருகேசபிள்ளை, அருள், ஜெனில் சிங், உறுப்பினர்கள் மாதவன்பிள்ளை, டோனிபெலிக்ஸ் உள்ளிட்டோரும் , மீன்வளத்துறை முன்னாள் சேர்மன். சகாயம் ஆகியோர் ஆய்வு செய்தனர். அந்த வகையில், தாழக்குடி பகுதியிலும் இறச்சகுளம் பேச்சாங்குளம் பகுதியிலும் தெள்ளாந்தி பகுதியிலும், இன்னும் பல்வேறு பகுதிகளிலும் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு குடோன்களும் செம்பகராமன்புதூர் போன்ற பகுதிகளில் சர்வோதய சங்கத்திற்கு கட்டிடங்களும், சீதப்பால் போன்ற பகுதிகளில் பொதுப்பணித்துறை பழைய ஆய்வு மாளிகை போன்றவைகளும் பாழடைந்து கிடக்கின்றன. அவற்றை சிறு பராமரிப்பு பணி செய்து நெல்கொள்முதல் நிலையமாக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை புகைப்படங்களுடன் மாவட்ட ஆட்சியருக்கு பாசன துறை நிர்வாகிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பெரியார் கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி

# சமையல் அறையில் சிலிண்டர் தீ விபத்து பள்ளி குழந்தைகள் பத்திரமாக மீட்பு



கிருஷ்ணகிரி, ஜூன் 19

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த பெரியார்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சமையலறையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதால் உடனடியாக பொறுப்பு.ஆசிரியர்.தனபாலன்.குழந்தைகளை மீட்டெடுத்தனர் சமையலறையில் சிலிண்டர் கசிவால் ஏற்பட்ட தீவிபத்து பள்ளியில் 1 வகுப்பு முதல் 5 வகுப்பு வறை 26 மணவ மாணவிகள் பயிலுகின்றனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஊத்தங்கரை தீயணைப்பு துறையினர் கேஸ் கசிவு ஏற்பட்ட சிலிண்டர் பத்திரமாக மீட்டு தீயணைத்து எந்தவித அசம்பாவம் இல்லாமல் தடுத்தனர். இச்சம்பவம் பகுதியில் பெரும்பரபரப்பு.

## கன்னியாகுமரி மாவட்ட

# கடலோர ஊர்க்காவல் படைக்கு மீனவ இளைஞர்கள் தேர்வு

நாகர்கோவில், ஜுன்.19

நாகர்கோவில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்ட கடலோர ஊர்க்காவல் படை அமைப்பில் மீன்வ இளைஞர்கள் ஆண்களுக்கான 28 காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. ஊர்க்காவல் படையில் சேர விரும்புகிறவர்களிடமிருந்துஉரியபடிவத்தில்விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து 22.06.2026 மற்றும் 23.06.2026 ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் படிவங்களைப் பெற்று அவற்றை பூர்த்தி செய்து காவல் கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்டம் முகவரியிட்டு மாவட்ட காவல் அலுவலகத்தில் 27.06.2026 ம் தேதிக்குள் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 27.06.2026 ம் தேதிக்கு பின்ன பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் வயது 01.06.2026 அன்று 18 வயது முடிவு பெற்றவராக இருக்க வேண்டும். 50 வயதிற்கு மேல் இருத்தல் கூடாது.

ஏனைய தகுதிகளாக நல்ல உடல் ஆரோக்கியமுடையவராகவும், நன்னடத்தை மற்றும் நல்லொழுக்கம் உடையவராகவும்இருத்தல்வேண்டும்.குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி பெற்றவராக இருத்தல் வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவராகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வமைப்பில் ஈடுபாட்டுடன் பணிபுரிபவர்களாகவும், பொதுநலத் தொண்டில் ஆர்வம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பாக ஊர்க்காவல் படையில் குறைந்தது மூன்று வருடம் பணிபுரிய விருப்பம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். இதில் தேர்வு செய்யப்படுவர்கள் கடற்கரையோர காவல்படையினருடன் இணைந்து செயல்பட வேண்டும். மீனவ இளைஞர்கள் மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகளிடம் சான்று (அடையாள அட்டை)பெற்றிருக்கவேண்டும்.உரியமீன்வளத்துறை சான்று இல்லாவிடில் மீனவர் என்பதை செய்யும் பொருட்டு சாதிச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் மீனவ இளைஞர்களுக்கு நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கமுதி பகுதியில்

# காட்டுப்பன்றிகள் நடமாட்டம் பொதுமக்கள் அச்சம்



கமுதி, ஜூன் 19

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் காட்டுப்பன்றிகள் கூட்டம் கூட்டமாக சுற்றித் திரிவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்கள் மற்றும் சாலையோரங்களில் காட்டுப்பன்றிகள் நடமாடுவதால் பயிர்கள் சேதமடைவதுடன், வாகன விபத்துகளும் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

எனவே, பொதுமக்களின் அச்சத்தை போக்கும் வகையில் வனத்துறையினர் உடனடி நடவடிக்கை எடுத்து காட்டுப்பன்றிகளை பாதுகாப்பாக வனப்பகுதிக்குள் விரட்ட வேண்டும் என பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மாவட்ட சுற்றுலா துறையின் சார்பில் குமரி திருவிழா 5 நாட்கள் நடைபெறுகிறது: கலெக்டர் தகவல்

நாகர்கோவில், ஜூன்.19

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

குமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் மாபெரும் குமரி திருவிழா நிகழ்ச்சியானது வருகின்ற 26 ம் தேதி முதல் 30. ம் தேதி வரை வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட 5 நாட்களும் கன்னியாகுமரி திரிவேணி சங்கமத்தில் பல்வேறு கலை வடிவங்கள், திரைப்பட மற்றும் சின்னத்திரை பிரபலங்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வகயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் அயல்மாநில மற்றும் உள்மாநில கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது. ஒவ்வொரு நாளும் மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பல்வேறு கலை வடிவங்களில் இந்த விழா நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள குமரி திருவிழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கலைஞர்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் குமரி திருவிழாவினை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. என அறிக்கையில் கூறியுள்ளார்.

முன்னதாக குமரி திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை நேற்று மேற்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், கலை பண்பாட்டுத்துறை உதவி இயக்குநர் சிவபுகழ், கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

திருப்பூர்: ஜூன் 19

மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே இன்று (18.06.2026) திருப்பூர்மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி தென்னம்பாளையம் வழியாக எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலை கல்லூரியில் நிறைவடைந்தது.

இப்பேரணியில் 100க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவியர்கள்கலந்து கொண்டு போதை பொருள் தடுப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர். முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் போதைப்பழக்கத்தால் ஏற்படும் தீயவிளைவுகளை நான் முழுமையாக அறிவேன். தான் போதை பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன், மேலும் எனது குடுபத்தினரையும் நண்பர்களையும் போதைப்பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப்பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாக தருவேன்.

போதைப்பொருட்களின் உற்பத்தி நுகர்வு பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப்பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அற்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன் என அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவியர்கள் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுமொழி எடுத்துக் கொண்டார்கள். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், உதவி ஆணையர் (கலால்) பாலமுருகன், கல்லூரி மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய வில்வித்தைப் போட்டி

# பிலாங்காலை புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சாதனை




திருவட்டாறு, ஜூன்.19

இந்தியாவின் கிராமப்புற விளையாட்டு மேம்பாட்டு அமைப்பின் சார்பில் 6வது தேசிய வில்வித்தை சாம்பியன் – 2026 போட்டிகள் நீலகிரி மாவட்டம், ஊட்டியில் அமைந்துள்ள புனித கில்டா ஆண்கள் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த தேசிய அளவிலான போட்டியில் திருவட்டாறு அருகே பிலாங்காலை புனித ஜோசப் உயர்நிலை பள்ளி மாணவர்கள் அர்சல் ஜோ, அஸ்மித் , அன்சிகா ஜான், நிகில் ஜான் ஆகியோர் பங்கேற்று முதல் பரிசுகளையும், ஒரு மாணவர் மூன்றாம் பரிசையும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்தனர்.

இச்சாதனையைப் பாராட்டும் வகையில் பள்ளியில் சிறப்பு பாராட்டு மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளித் தாளாளர் அருட்பணியாளர் ரென்னி களத்தில், தலைமை ஆசிரியர் அருட்பணியாளர் லூக்கா, ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

மேலும், மாணவர்களுக்கு பயிற்சி வழங்கிய பயிற்சியாளர் ஜனார்த்தனன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் திபோர்சியஸ் ஆகியோர் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் கவுரவிக்கப்பட்டனர். மாணவர்களின் இச்சாதனைக்கு பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

# நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையம் 45 நிமிடம் இருளில் மூழ்கியது: பயணிகள் பரிதவிப்பு

நாகர்கோவில், ஜூன். 19

கன்னியாகுமரி மாவட்டத்தின் மிக முக்கிய ரயில் நிலையமாக நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையம் உள்ளது. இந்த நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 10. 15 மணியளவில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அதே நேரத்தில் பல்வேறு ஊர்களுக்கு செல்லும் ரயிலுக்காக நூற்றுக்கணக்கான பயணிகள் நடைமேடைகளில் காத்திருந்தனர்.திடீரெனவிளக்குகள்அணைந்ததால் ஒட்டுமொத்த ரயில் நிலைய வளாகமும் கும்மிருட்டில் மூழ்கியது.

பொதுவாக ரயில் நிலையம் போன்ற முக்கிய பொது இடங்களில் மின்தடை ஏற்படும்போது உடனடியாகதானியங்கி முறையில் ஜெனரேட்டர்கள் இயங்கி மின்சாரம் வழங்கப்படும். ஆனால் நாகர்கோவில் ரயில் நிலையத்தில் இரவு மின்தடை ஏற்பட்டு நீண்ட நேரம் ஆகியும் ஜெனரேட்டர் இயக்கப்படவே இல்லை என்று கூறப்படுகிறது.

இதனால் பிளாட்பாரங்கள், டிக்கெட் கவுண்டர்கள் மற்றும் மேம்பாலங்கள் அனைத்து பகுதிகளிலும் இருளில் மூழ்கியது.

மின்சார இல்லாமல் பிளாட்பாரங்களில் அமர்ந்து இருந்த பயணிகள், முதியவர்கள் மற்றும் குழந்தைகளுடன் வந்தவர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். பயணிகள் தங்கள் செல்போன் டார்ச் வெளிச்சத்தை வைத்துக் கொண்டு தேவையான இடங்களுக்கு சென்றனர்.

இருளை பயன்படுத்தி பயணிகளின் உடமைகளை திருடி போக வாய்ப்புள்ளதாக கருதி பலரும் அச்சத்துடன் காணப்பட்டனர். ரயில்வே பாதுகாப்பு படையினரும் இருளில் பயணிகளை கண்காணிப்பதில் சிரமத்தை எதிர்கொண்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டதற்கான காரணம் குறித்து ரயில்வே ஊழியர்களிடம் கேட்டபோது அவரிடம் இருந்து முறையான பதில் எதுவும் கிடைக்கவில்லை என பயணிகள் குற்றம் சாட்டினர். கடைசியாக இரவு 11 மணியளவில் மீண்டும் மின்சாரம் சீரானது. அதன் பின்னரே பயணிகள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.



# ஈரோடு தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி 6 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

ஈரோடு ஜூன் 19

ஈரோடு மாவட்டத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி நடந்து வருகிறது. தாளவாடியில் நடந்த ஜமாபந்தியை ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி ஈரோடு தொடங்கி வைத்து பொது மக்களிடம் மனுக்களை பெற்றார்.

இதை தொடர்ந்து ஈரோடு தாலுகா அலுவலகத்தில் ஈரோடு கோட்டாட்சியர் சிந்துஜா தலைமையில் ஜமாபந்தி நடந்தது. அவர் பொது மக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 46 மனுக்களை பெற்றார். இதில் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான உத்தரவு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு தாசில்தார் முத்து கிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். வருகிற 23 ந் தேதி வரை இந்த ஜமாபந்தி நிகழ்ச்சி நடக்கிறது.



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் பசலிக்கான வருவாய் தீர்வாயம் ஜமாபந்தியில் வட்டாட்சியர் அலுவலகவளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இதில் மாவட்ட நில அளவை உதவி இயக்குனர் செந்தில்குமார், நல்லம்பள்ளி வட்டாட்சியர் பிரசன்னமூர்த்தி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கருங்கலில் செல்போன் கடை உரிமையாளரிடம் ரூ 1 கோடி மோசடி

## வாலிபர் கைது; 2 பேருக்கு வலை



கருங்கல், ஜூன்.19

கருங்கல் பகுதியை சேர்ந்தவர் ஐயப்பன் (52). இவர் கருங்கல் பேருந்து நிலையம் அருகே மொபைல் கடை நடத்தி வருகிறார். இந்த நிலையில் ஐயப்பன் அடிக்கடி வெளிநாடு சென்று வந்தார். இதனால் செல்போன் கடையை நிர்வாகிக்க தனது மைத்துனர் சுபின் என்பவரிடம் ஒப்படைத்தார். மேலும் செல்போன் கடைக்கு உரிய வங்கி கணக்கு, வங்கி காசோலைகள் உள்ளிட்ட அனைத்தையும் சுபினிடம் ஒப்படைத்துள்ளார்.

சுபினுக்கு உதவியாக கப்பியறை பகுதியை சேர்ந்த அபிஷேக் (22) என்பவர் வேலைக்கு சேர்த்துள்ளார். இது குறித்த ஐயப்பனுக்கு தகவல் தெரிவித்து, அவரும் வேலைக்கு சேர்க்க சம்மதித்துள்ளார்.

இந்த நிலையில் சுபின் திடீரென இறந்து விட்டார் இதை அடுத்து அபிஷேக் உதயமார்த்தாண்டத்தை சேர்ந்த சுபிஷ் (27) என்பவரை வேலைக்கு சேர்த்துள்ளதாக ஐயப்பனிடம் கூறியுள்ளார். இதை தொடர்ந்து ஐயப்பன் மாதந்தோறும் இருவருக்கும் சம்பளம் கொடுத்து வந்துள்ளார்.

இந்த நிலையில் ஐயப்பன் தற்போது ஊருக்கு வந்துள்ளார். அப்போது புதிய கார் வாங்க ஐயப்பன் தனது வங்கி பணம் பரிவர்த்தனைகளை சரி பார்த்தார். அப்போது சுபினிடம் ஒப்படைக்கப்பட்ட வங்கி காசோலையை திருடி போலி கையெழுத்து மூலம் இரண்டு வங்கிகளில் இருந்து அபிஷேக் மற்றும் சுபிஷ் ஆகியோர் சேர்ந்து ரூபாய் ஒரு கோடி பணம் எடுத்து மோசடி செய்தது தெரிய வந்தது.

இதில் அபிஷேக் ரூ. 72 லட்சம் வரையும், சுபிஷ் ரூ. 24 லட்சம் வரை மோசடி செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களுக்கு பண மோசடிக்கு உதவி செய்ய தனியார் நிதி நிறுவனத்தில் பணியாற்றும் மேலாளர் சைபின் என்பவர் உதவியாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதை அடுத்து ஐயப்பன் கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஆனால் கருங்கல் போலீசார் புகார் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதை அடுத்து ஐயப்பன் மாவட்ட குற்றப்பிரிவு போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் செல்போன் கடை உரிமையாளரிடம் ஒரு கோடி வரை மோசடி செய்ததாக சுபிஷ் என்பவரை கைது செய்தனர். மேல தலைமுறை வான அபிஷேக், சைபின் உள்ளிட்டவர்களை தேடி வருகின்றனர்.



# அஞ்சுகிராமம் பகுதியில் வளர்ச்சி திட்டப்பணிகள்: மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.19

தோவாளை ஒன்றியத்துக்குட்பட்ட அஞ்சுகிராமம் பேரூராட்சி, பீமநகரி மற்றும் திருப்பதிச்சாரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேறு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது:

அஞ்சுகிராமம் முதல்நிலை பேரூராட்சியில் மூலதன மானிய நிதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பில் நவீன எரிவாயு தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு, அனைத்து தரப்பட்ட மக்களும் இந்த நவீன எரிவாயு தகன மேடையினை பயன்படுத்திக்கொள்ளலாம் என கேட்டுக்கொள்ளபட்டது. அழகப்பபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 15 வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பில் கூடுதல் மருத்துவ கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பேச்சிப்பாறையிலிருந்து அழகப்பபுரம் வழியாக வாய்க்காலில் செல்லும் தண்ணீரானது, செங்குளத்தில் சேமித்து வைத்து பாசன வசதிக்கு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாய்க்கால்களின் கரையோரம் உள்ள வீடுகளிலிருந்து கழிவுநீர் திறந்து விடுவதாகவும், அவற்றினை தடுத்திடுமாறும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையின் அடிப்படையில் கழிவுநீரை திறந்து விடும் வீடுகளின் குழாய்களை மூடுவதற்கு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பெருமாள்நகரில் ஊரக வளர்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நாற்றங்கால் பண்ணையில் 10,000 மரங்கள் உள்ளன. 6 அடிக்கு மேல் வளர்ந்த பிறகு அனைத்து மரக்கன்றுகளையும் சாலை ஓரங்களில் மரகன்றுகளை நட்டிட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து சடையால்புரம் கிராமத்தில் பழையாறு ஆற்றுப்படுகையில் ரூ.20 இலட்சம் மதிப்பில் உறைகிணறு அமைந்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் பீமநகரி ஊராட்சியில் அன்னை நகர் பகுதியில் ரூ.18.36 இலட்சம் மதிப்பில் கிராம ஊராட்சி சேவை மையத்தில் செல்லும் அணுகு கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் உதவி இயக்குநர் பேரூராட்சிகள் கோமதி, பேரூராட்சி செயல் அலுவலர்கள் உஷா கிரேஸ் (அஞ்சுகிராமம்), பூதப்பாண்டி (அழகப்பபுரம்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தருமபுரியில் குடிசைத் தொழில் வரியை தொழிற்சாலை வரியாக உயர்த்திய

# தருமபுரி நகராட்சியை கண்டித்து விசைத்தறி உற்பத்தியாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி ஜூன் 19

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட அன்னசாகரம் பகுதியில் சுமார் 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக விசைத்தறி நெசவு தொழில் செய்து வருகின்றனர். தருமபுரி நகராட்சியில் விசைத்தறி கூடத்திற்கு தொழிற்சாலை வரியாக கடந்த 2024 ம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மாற்றியுள்ளது. இது நெசவாளிகளுக்கு ஏற்புடையதாக இல்லை எனவும், நகராட்சி நிர்வாக இயக்குனரகம் சுற்றறிக்கையின்படி தமிழக அரசினால் இலவசம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் விசைத்தறிகளை நிறுவி தொழில் நடத்தி வந்தால் அதற்கு தொழிற்சாலை வரி மாற்றம் செய்யவில்லை என சுற்றறிக்கையில் தெளிவாக அறிவித்துள்ளது. தற்போது குடிசைத் தொழில்வரியாகவே தொடரப்பட வேண்டும் என அறிக்கை கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த உத்தரவுக்கு மாறாக தருமபுரி நகராட்சி நிர்வாகம் குடிசைத் தொழில் வரியை தொழிற்சாலை வரியாக மாற்றம் செய்து வந்துள்ளது. நகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்ய வேண்டும். தொழிற்சாலை வரியை ரத்து செய்து பழைய குடிசை வரியை நகராட்சி பெற வேண்டும். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நெசவு தொழில் குடிசை தொழிலாக உள்ள நிலையில் தருமபுரி நகராட்சி மட்டும் நெசவாளர்களிடம் தொழிற்சாலை வரியை நிர்ணயிப்பது ஏற்புடையது அல்ல உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நகராட்சி அலுவலகம் அருகே சுமார் 100 க்கும் மேற்பட்டோர் விசைத்தறி தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நகராட்சி நிர்வாகம் தொழிற்சாலை வரியை மாற்றி குடிசைத் தொழில் வரியாகவே அறிவிக்கவில்லையெனில் மாவட்டம் முழுவதும் உள்ள விசைத்தறி தொழிலாளர்களை ஒன்றிணைத்து நகராட்சி அலுவலகம் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எச்சரிக்கை விடுத்தனர்




கோவை பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு அனைத்து முற்போக்கு இயக்கங்கள் சார்பில் தொடர்ச்சியாக நடத்தப்படும் நீட் முறைகேடுகளை கண்டித்தும் நீட் தேர்வினை உடனடியாக ரத்து செய்யக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## இரணியல் அருகே

# பிளஸ் 1 மாணவி பலாத்காரம் இசை கலைஞர் மீது வழக்கு

குளச்சல், ஜூன்.19

இரணியல் பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் பள்ளியில் பிளஸ்1 படித்து வருகிறார். இந்த நிலையில் சிறுமி கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தக்கலை பகுதியில் உள்ள ஒரு கோயிலுக்கு சென்றுள்ளார். அப்போது அங்கு திருவிதாங்கூர் பகுதி சேர்ந்த சிங்காரி மேளமடிக்கும் இசைக்கலைஞரான கதிஷ் (19) என்பவரிடம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் கதிஷ் சிறுமியின் செல்போன் எண்ணை பெற்றுள்ளார். இதை அடுத்து இருவரும் செல்போனில் அடிக்கடி பேசி வந்துள்ளனர்.

இந்த நிலையில் கதிஷ் சிறுமியிடம் நேரில் சந்தித்து பேச வேண்டும் என கூறியுள்ளார். இதையடுத்து சிறுமி தனது பாட்டி வீட்டிற்கு வருமாறு அழைத்துள்ளார். தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் 20ஆம் தேதி இரவு சிறுமியின் பாட்டி வீட்டிற்கு சென்றுள்ளார். பின்னர் இருவரும் வீட்டில் மொட்டை மாடியில் இருந்து பேசிக் கொண்டிருந்தனர். அந்த நேரம் கதிஷ் சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

அதை தொடர்ந்து சில நாட்களுக்கு பிறகு கதிஷ் சிறுமியுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டாராம். இதனால் அதிர்ச்சியில் இருந்த சிறுமிக்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டது. பின்னர் குடும்பத்தினர் அவரை குமரி அரசு மருத்துவ கல்லூரி அழைத்து சென்றனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் சிறுமி 2 மாத கர்ப்பமாக இருந்தது தெரியவந்தது.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் இது குறித்து சிறுமியிடம் கேட்டபோது கதிஷ் பலாத்காரம் செய்தது தெரிய வந்தது. உடனடியாக குளச்சல் மகளிர்காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் மகளிர் போலிசார் பிளஸ் 1 மாணவியை பலாத்காரம் செய்த இசை கலைஞர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## அருமனை அருகே

# மது போதையில் காருக்குள் தூங்கிய வாலிபர் கைது

மார்த்தாண்டம், ஜூன். 19

குலசேகரம் அருகே உண்ணியூர் கோணம் பகுதியை சேர்ந்தவர் ஜீவன் (38). இவர் அருமனை கிளாத்தூர் என்ற பகுதியில் உள்ள பிரதான சாலையின் நடுவே காரைநிறுத்திவிட்டுபாக்கவிளக்குகளைஎரியவிட்டபடி காரின் உள்ளே தூங்கியுள்ளார். நீண்ட நேரமாக கார் அங்கிருந்து எடுக்காததால் அந்த பகுதியில் கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

இது குறித்து அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கடையாலுமூடு காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். உடனே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தொடர்ந்து காரின் கதவை திறந்து பார்த்தனர். அப்போது காருக்குள் ஜீவன் அயர்ந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தார்.

உடனே போலீசார் அவரை தட்டி எழுப்பினர். அப்போது அவர் போதையில் இருந்த தெரிய வந்தது. மேலும் காருக்குள் மது பாட்டில்களும் கிடந்தது. உடனே காரை போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர் ஜீவன் மீது வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர். மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.



## திற்பரப்பு அருவியில்

# தமிழக சுற்றுலா துறை பொது மேலாளர் ஆய்வு

மார்த்தாண்டம், ஜூன்.19

குமரி மாவட்டத்தில் திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டி பாலம் உட்பட சுற்றுலா தலங்களில் தமிழக சுற்றுலா துறை பொது மேலாளர் லெஷ்மி பிரியா தலைமையில் அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது அருவியில் சுற்றுலா துறை சார்பில் நடைபெற்று வரும் கழிவறை மற்றும் ஆண் பெண்கள் உடை மாற்றும் அறைகளில் கதவுகள் தரம் அற்ற முறையில்அமைக்கப்பட்டுஉள்ளதால்அந்தகதவுகளை மாற்றி அமைக்கவும், சுற்றுலா பயணிகள் பொருட்கள் பாதுகாப்பு அறை உடை மாற்றும் அறை அருகே செயல்படும் வகையில் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் பொது பணி துறை அதிகாரிகள் உதவியோடு அரசு புறம் போக்கு நிலங்களை அடையாளம் கண்டு அளவீடு செய்து சுற்றுலா பயணிகள் வாகனங்கள் நிறுத்த முறையான நடவடிக்கை எடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது பேருராட்சி தலைவர் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

# மாற்றுத்திறனாளிகளின் சுய உதவிக் கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்



தஞ்சாவூர் ஜூன் 19

தமிழக முதல்வர் தேர்தலில் அளித் த வாக்குறுதியின் படி மாற்றுத் திறனாளிகளின் சுய உதவி கடன்க ளை தள்ளுபடி செய்ய வேண்டும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில்நடைபெற்ற மாற்றுத்திறனா ளிகளுக்கான குறைதீர்க் கும் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது

மாவட்ட கலெக்டர் ரேவதி தலை மையில் நடை பெற்ற கூட்டத்தில் மாற்று திறனாளிகள் வலியுறுத்தி ய கோரிக்கைகள்:

மாற்றுத்திறனாளிகள் பேட்டரி ஆட்டோ வாங்க மத்திய அரசின் மானியத்துடன், மாநில அரசு கூடுதலாக மானியம் வழங்க வேண்டும், தமிழக அரசின் பொது சேவை மையத்தை வேலை வாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி களுக்கு வழங்க வேண்டும்.

வருவாய்த்துறை மூலம் உதவித் தொகைக்கு புதிதாக பதிவு செய்த வர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும். தவழும் மாற்றுத்திறனா ளிகளுக்கு ஆண்டுக்கு 12 ஜோடி கையுறை வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் கட்டப் பட்ட வணிக வளாகங்களில் 5 சத வீத கடைகள்மாற்றுத்திறனாளிக ளுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும். மாற்று திறனாளிகள் பெற்றுள்ள அனைத்து வித சுய உதவி கடன் களையும் தள்ளுபடி செய்வதாக தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தேர்தலில் வாக்குறுதி தெரிவித் தார். இதற்கான அறிவிப்பை புதிய நிதி நிலை அறிக்கையில் முதல்வர் வெளியிட வேண்டும் என வலியுறுத்தினார்.

கூட்டத்தில்10 மாற்றுத்திறனாளி களுக்கு காதலி கருவி ,ஒருவருக்கு மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது தையல் இயந்திரம் வேண்டி 2 மாற் றுத் திறனாளிகள் தாய்மார்கள் மனு அளித்தவுடன் மாவட்ட கலெக்டரின் சிறப்பு நிதியிலிருந்து இருவருக்கும் தையல் இயந்திரங் கள் வழங்கப்பட்டன.

மாவட்ட வருவாய் அலுவலக தியாகராஜன் ,பயிற்சி கலெக்டர் ரமேஷ் ,தனித்துணை ஆட்சியர் சௌமியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



# நாகர்கோவில் மாநகராட்சியின் புதிய ஆணையராக ஐஸ்வர்யா பொறுப்பேற்றார்

நாகர்கோவில்,ஜூன். 19

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராக பணியாற்றி வந்த நிஷாந்த் கிருஷ்ணா என்பவர் சிவகங்கை மாவட்ட கலெக்டராக பதவி உயர்வுடன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியராக பணியாற்றி வந்த ஐஸ்வர்யா என்பவர் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராக நியமித்து தமிழ்நாடு அரசு முதன்மைச்செயலாளர்சாய்குமார்உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி அவர் நேற்று நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டார். புதிய ஆணையராக பொறுப்பேற்றுள்ள ஐஸ்வர்யா கடலூர் மாவட்டத்தை சேர்ந்த ஒரு விவசாயின் மகளாவார். சிவில் இன்ஜினியரிங் படித்துள்ள இவர் தனது 22 வயதிலேயே ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்று சாதனை படைத்தவர். கடந்த 2018 ஆம் ஆண்டு யுபிஎஸ்சி தேர்வில் அகில இந்திய அளவில் 628 வது இடம் பிடித்து, ரயில்வே கணக்கு சேவையில் சேர்ந்தார். அதன் பின்னர் தளராத முயற்சியால் மீண்டும் 2019 தேர்வு எழுதி 44வது இடத்தை பிடித்து ஐஏஎஸ் அதிகாரி ஆனார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட கோர சுனாமியால் இவருடைய வீடு முழுமையாக அழிந்த நிலையில் அத்தகைய கடினமான சூழலில் இருந்து மீண்டு வந்து இவர் இந்த உச்சத்தை தொட்டுள்ளார். இவரது சகோதரி சுஷ்மிதா ஆந்திர பிரதேசத்தில் ஐபிஎஸ் அதிகாரியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் பேசிய ஆணையர் ஐஸ்வர்யா, நாகர்கோவில் மாநகராட்சி மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதிலும் சுகாதாரப் பணிகளை துரிதப்படுத்துவதிலும் முன்னுரிமை அளிக்கப்படும். பொதுமக்களின் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.




# தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க கூட்டம்

## மாநிலத் தலைவர் சுபாஷ் , சௌமியா அன்புமணி எம்.எல்.ஏ பங்கேற்பு

தருமபுரி ஜூன் 19

தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிக கையாளர் சங்க கூட்டம் தருமபுரி நட்சத்திர ஹாலில் மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட செயலர்ள் ராஜ்குமார் வரவேற்று பேசினார்.

மண்டல செயலாளர் காதர் மொய்தீன், மாவட்ட பொருளாளர் புகழேந்தி, செய்தி தொடர்பாளர் ராமதாஸ், மாநில நிர்வாக குழு உறுப்பினர் சீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் சுபாஷ் தருமபுரி மாவட்ட சங்கத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட

மாவட்ட செயலாளர் ராஜ்குமாருக்கு பதவி ஏற்பு நிகழ்ச்சி நடத்தி வைத்து, பத்திரிகையாளர்களுக்கு சங்க உறுப்பினர் அடையாள அட்டை வழங்கி விழா பேரூரை ஆற்றினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி கலந்துகொண்டு மூத்த பத்ரிகையாளர்கள் முரசொலிமணி, மாமணி, கோபால், சோமசுந்தரம், சீனிவாசன், ஸ்ரீகாந்த், ரவிச்சந்திரன், குமரன், புகழேந்தி, ஆகியோருக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார் . இதனை தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கு தனியார் பேருந்து இலவச பயண அடையாள அட்டை மற்றும் சங்க புதிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பாக இலவச வீட்டு மனை பட்டா மற்றும் காட்சி ஊடகத்திற்கு ஓய்வூதியம் வழங்க கோரி கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்டவர் பத்திரிகையாளர்களுக்காக எந்த உதவியும் செய்ய தயாராக இருக்கின்றேன் என தெரிவித்தார். இவ்விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க மாநில, மாவட் நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட துணைத்தலைவர் அருண் குமார் நன்றி கூறினார்.

## கொணவட்டத்தில்

# ஸ்ரீசக்தி முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்




வேலூர், ஜூன் 19

வேலூர் மாநகரம் கொணவட்டம் வசந்தம் நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி சக்தி முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா ஜூன் 18 வியாழனன்று நடைபெற்றது.

முன்னதாக கணபதி பிரார்த்தனை, கோ பூஜை, வாஸ்து சாந்தி, பிரவேசபலி, முதல் கால யாகசாலை பூஜை, இரண்டாம் கால யாகசாலை பூஜை, தம்பதி சங்கல்பம், பூர்ணாஹூதி, தாய் வீட்டு சீதனம் கொண்டு வருதல் நிகழ்வுகளுக்கு பின் முதலில் கோவில் கோபுர விமானத்திற்கு புனிதநீர் கொண்டு மகா கும்பாபிஷேகமும், நிறைவாக அம்மன் சிலைக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அதன் பிறகு அபிஷேக அலங்காரங்கள் செய்து தீபாராதனை பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இதனையொட்டி மாலையில் சக்தி முத்துமாரியம்மன் திருவீதி உலா நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் மற்றும் விழா ஏற்பாட்டாளர்களான பாரத், பொன்னம்பலம், மணிகண்டன், அசோக்குமார், சந்தோஷ் மற்றும் வசந்தம் நகர் பொது மக்கள் இளைஞர் அணியினர் சிறப்பாக செய்திருந்தனர்



# ஈரோடு கடைகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்

ஈரோடு ஜூன் 19

ஈரோடு பகுதியில் தடை செய்யப் பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் விற்கப்படுவதாக புகார்கள் கூறப்பட்டன.

இதை தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் பல குழுக்களாக சென்று கடைகளில் அதிரடி சோதனை நடத்தி பிளாஸ்டிக் பைகள் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள். ஈரோடு புது மஜீத் வீதி சுல்தான் பேட்டை உள்பட பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மாநகராட்சி அதிகாரிகள் மாசு கட்டுப்பாடு அதிகாரிகளுடன் இணைந்து கடை கடையாக சென்று சோதனை நடத்தினர்.

மாநகராட்சி சுகாதார அலுவலர் நல்லசாமி தலைமையில் நடந்த இந்த சோதனையில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் பொருட்கள் விற்கப்படுவது தெரிய வந்தது. அவற்றை கிலோ கணக்கில் பறிமுதல் செய்தனர். மேலும் அவைகளை விற்ற கடை உரிமையாளருக்கு அபராதமும் விதித்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டம்

# கும்பகோணம் வளர்ச்சி திட்ட பணிகள் கலெக்டர் ஆய்வு செய்தார்



தஞ்சாவூர் ஜுன் 19

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

மகாமக திருவிழாவையொட்டி மகாமக குளத்தில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகள், மாநகராட்சி மூலம் செயல்படுத்த வேண்டிய கட்டுமான பணிகள், மின் வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பணிகள் குறித்து மாநகராட்சி அலுவலர்களுடன் கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை யின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்கள் குறித்தும் கடையின் மூலம் பயன் பெற்று வரும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்தும், மின்னணு விற்பனை முனைய கருவி செயல்பாடு குறித்தும் கேட்டறிந்தார்.

ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் குழந்தைகள் நேய பள்ளிகள் கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூபாய் 34.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்ற 2வகுப்பறைகளை பார்வையிட்ட கலெக்டர் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அறிவுறுத்தி னார் .ஊராட்சி மன்ற அலுவலக த்தில் ஆய்வு செய்தபோது குடிநீர், சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் குறித்து கேட்டறிந்தார் அரசு செயல்படுத்தி வரும் அனைத் து திட்டங்களையும் பொதுமக்கள் முழுமையாக பயன்பெறும் வகையில் விரைவாக செயல் படுத் துமாறு அலுவலர்களுக்கு அறிவுறு த்தினார்

செம்பியவரம்பல் ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மினி ஸ்டேடியம் கட்டுமான பணிகளை ஆய்வு செய்து, உயர்தரத்தின் பணிகளை விரைந்து முடித்து, இளைஞர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலருக்கு அறிவுறுத்தினார்

தொடர்ந்து 15வது மத்திய நிதி குழு பொது சுகாதார மானியத் திட்டத்தின் கீழ் ரூபாய் 65 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வட்டார பொது சுகாதார அளவு கட்டிடமான பணிகளை பார்வையிட்டார். பின்னர் கும்பகோணம் சமூக நீதி கல்லூரி மாணவிகள் விடுதிகளை பார்வை யிட்டு, அங்கு தங்கு உள்ள மாணவி களிடம் குறைகளை கேட்டறிந்தார்

ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் திருமலை, மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரகுமார், உதவி கலெக்டர் பயிற்சி சுபாஷ் கார்த்திக் , தாசில்தார் பூங்கொடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமானுல்லா, நந்தினி ஒன்றிய பொறியாளர் தமிழ்ச்செல்வன், திருநாவுக்கரசு மற்றும் பலர் உடன் இருந்தனர்




## தஞ்சாவூரில்

# முன்னாள் அமைச்சர் உபயதுல்லா பிறந்தநாள், புகழ் மலர் வெளியீட்டு விழா

தஞ்சாவூர் ஜூன் 19

தஞ்சாவூரில் முன்னாள் அமைச்சர் சி நா.மீ.உபயதுல்லா 85 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவும் புகழ் மலர் வெளியீட்டு விழாவும் தஞ்சை முத்தமிழ் மன்றம் சார்பில் அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது

விழாவிற்கு தமிழ் பல்கலைக் கழகம் முன்னாள் பதிவாளர்.கு.வே. பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். புகழ் மலரை திராவிடர் கழக தலைவர் கீ. வீரமணி வெளியிட,அதை திருச்சி தமிழ் இலக்கியகம் அருள்தந்தை அமுதன் அடிகளார்களும், ,சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரும் தமிழ் பல்கலைகழக முன்னாள் துணைவேந்தருமான ராஜேந்திரன் பெற்றுக் கொண்டார்

திருவையாறு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் துரை சந்திரசேகரன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் டி கே ஜி நீலமேகம் , துணை மேயர்கள் டாக்டர் அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்) சு.ப தமிழழகன் (கும்பகோணம்) முன்னாள் மேயர் சண் ராமநாதன், முன்னாள் நகர் மன்ற தலைவர் இறைவன் ,முன்னாள் ஒன்றிய குழு தலைவர் செல்வம், திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயகுமார், மாவட்ட தலைவர் அமர்சிங், அரண்மனை தேவஸ்தா ன பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன் சிலே, பாம்பே ஸ்வீட்ஸ் சுப்பிரமணிய சர்மா, மகாராஜா நிறுவனங்கள் ஆசிப் அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

முன்னதாக இசையரங்காக சாலியமங்கள் ராமதாஸ் குழுவினர் வீணை இசையும் இசையரங்கமும், கலைநிகழ்ச்சியாக மார்னிங் ஸ்டார் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் சடையார் கோவில் நாராயணசாமி குழுவினரின் கோலாட்ட நிகழ்ச்சி யும், இசையஞ்சலியாக வளர்ப்பக்குடி வீர சங்கரும் ,கவியரங்காக கவிதை பித்தன் தலைமையில் புவியிற்சிறந்த மாமனிதருக்குப்புகழஞ்சலி தஞ்சை இனியன், கவிஞர் இளங்கோவன், வல்லம் தாஜ்பால் , தமிழ் மணி திருவள்ளுவர், கவிஞர் ராகவ் மகேஷ், கவிஞர் மரிய எட்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்

தஞ்சாவூர் முத்தமிழ் மன்ற பொதுச் செயலாளர்புலவர் கோபாலகிருஷ்ணன், அனைவரை யும் வரவேற்றார் .நிறைவாக முத்தமிழ் மன்ற தலைவர் சி.நா.மீ.உ .பரிதா பேகம் நன்றி கூறினார்



பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தமிழகத்தில் ஜாதி வாரியாக கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்து வந்த நிலையில் தற்போது தமிழக அரசு சட்டப்பேரவையில் சமூக நீதி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இதை தொடர்ந்து தருமபுரி மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நகர பேருந்து நிலையத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன் தலைமையில் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். இதில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.